(4) தகவல் கோரல்.

அறிவிப்பு கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளாதது பற்றி.

திரு. க. சுப்பு : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் படித்த பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். இந்தப் பிரச்னை என்ன ஆயிற்று என்று கேட்கலாமே தவிர, பொருளைப் படிக்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் என்னிடம் இன்னும் தயாராகவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அவர் தயார் செய்து கொண்டுதான் பதில் சொல்ல வேண்டும். அதுகூட இல்லை. தாங்கள் இப்போது எழுப்பியதை அறையிலே கேட்டிருக்க வேண்டும். நான் பல முறை சொல்லியிருக்கிறேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, ஒத்திவைப்புப் பிரச்சினை யாக இருந்தாலும் சரி, உரிமைப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கவனஈர்ப்பாக இருந்தாலும் சரி, அறையிலே வந்து தெளிவு படுத்திக் கொள்ளலாம். அவையிலே வந்து கேட்டு நேரத்தை வீணாக்கக்கூடாது. நான் இதைப் பன்முறை சொல்லியிருக்கி றேன், பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கிறேன்.

திரு. துரைமுருகன் : 41, 42-வது விதிகளின்கீழ் அறிவிக்கை களைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள் என்று பேரவைத் தலைவர் டேப் ரிக்கார்டு பண்ணி வைத்துக் கொள்ளலாம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் நீங்கள் அமருங்கள். பேரவைத் தலைவருடைய அனுமதியில்லாமல் எழுந்து பேசுவதை முதலில் நிறுத்துங்கள். அதுவே பெரிதாகும். மேலும் உட் கார்ந்து கொண்டே பேசாதீர்கள்.

திரு. க. சுப்பு : (பேச எழுந்து நின்றுகொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள்,

திரு. க. சுப்பு : என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மான அறிவிக்கை என்ன ஆயிற்று ? கோவை விவசாயிகள் வரி கொடா இயக்கம் துவங்குவதாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து பேரவைத் தலைவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்கள். கற்றுக் கொடுப் பதாக இருந்தால் வேறு இடத்தில் வந்து கற்றுக் கொடுங்கள், நான் கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.10—10.15—இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

ஆனால் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றிய முக்கியத்துவத்தைப் பற்றியோ, அதனுடைய பொருளைப் பற்றியோ இங்கு எழுப்பாதீர்கள். 42-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேட்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். கோவை என்றெல்லாம் ஆரம்பித்து அதைப்பற்றிச் சொல்லி உண்மையான விவகாரத்தை இங்கே கொண்டுவந்துவிடலாம் என்று நினைக்கிறீர்கள். ஓரளவுக்கு எனக்கும் அனுபவம் இருக்கிறது. அப்படிச் செய்யக் கூடாது.

திரு. க. சுப்பு : விவசாயிகள் சம்பந்தப்பட்ட பிரச்னையைப் பொறுத்து நான் 14-ஆம் தேதி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிக்கை கொடுத்திருந்தேன். இந்த அவையிலே அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி உடனே எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, அதே பிரச்னையைப் பற்றி நேற்று மேலவையிலே எல்லா விளக்கங்களையும் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் அதற்கு முன்னாலேயே ஒத்திவைப்புத் தீர்மானத்தின் அறிக்கையைத் தங்களிடம் கொடுத்திருக்கிறேன். முதலில் இங்கேதான், இந்த அவையிலேதான் அனுமதித்து இருக்கவேண்டும். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிப் பேசக்கூடாது. இந்தச் சபைக்குள்ள்வளவு முக்கியத்துவம், அந்தஸ்து உண்டோ, அதே முக்கியத்துவமும், அந்தஸ்தும் மேலவைக்கும் உண்டு. ஆகவே, உறுப்பினர் அவர்கள் * * * பற்றிச் சொல்லியவைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : நான் மேலவையினுடைய அந்தஸ்தைக் குறைத்துச் சொல்லவில்லை. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்று உறுப்பினர் அவர்கள் சொன்னதை நீக்கிவிட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு: முதலில் கவுன்சிலில் இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கியது உரிமை மீறல் பிரச்னையாகும். இந்த அவையின் உரிமையைப் பாதிப்பதாகும். வேண்டுமானால் நீங்கள் சொன்னால், அமைச்சர் அவர்கள்மீது நான் உரிமை மீறல் பிரச்னை கொண்டு வருகிறேன்.....

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.10—10.15-இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. உங்களுடைய உரிமை அது. உங்களுடைய உரிமைக்குக் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. நீங்கள் இஷ்டப்பட்டு பேரவையின் விதியின்கீழ் கொண்டு வரவேண்டுமானால் கொண்டு வரலாம். அதைப்பற்றி பேச்சுக்கு இடமில்லை. நான் வேண்டாம் என்று சொன்னால் சுப்பு அதன்படி கேட்பவரும் இல்லை, எனக்குத் தெரியும். திரு. சுப்பு அவர்கள், விதியின்கீழ் எதை எழுதித் தரமுடியுமோ அதை எழுதித் தாருங்கள். விதிகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்று நான் முடிவு செய்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 42-வது விதியின்கீழ் எந்த ஒத்தி வைப்புத் தீர்மானமும் விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து எழவில்லை என்றாலும் அதே நேரத்தில் சப்ளிமெண்டரி கேள்விகளுக்குப் பதில் சொல்லுகின்ற வகையில் சில பதில்கள் தரப்பட்டன. 42-வது விதியின்கீழ் இதுவரை அந்தப் பிரச்சினை மேலவையில் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நான் சொன்னது, 42-வது விதியின் கீழ் நான் இந்தப் பேரவையில் அறிவிக்கை கொடுத்திருக்கிறேன். ஆனால் மேலவையில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது இதுபற்றிய விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த விவரங்களை இங்கே கொடுப்பதற்குப் ப்ரஃப்ரன்ஸ் கொடுத்திருக்க வேண்டும் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே சுப்பு அவர்கள் கொடுத்தது ஒத்தி வைப்புத் தீர்மானம், அங்கே கேள்விக்குப் பதில் என்றெல்லாம் அதற்கும் இதற்கும் ஒப்பிட்டுப் பேசக் கூடாது. அங்கே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்திருந்து இங்கே பதில் சொல்லாமல் அங்கே மட்டும் சொல்லியிருந்தால் எடுத்துக் காட்டலாம். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. துரை முருகன் : இந்தப் பிரச்சினை குறித்து திரு. சுப்பு அவர்கள் 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் மெட்டீரியல்ஸ் இருக்கும்போது ஏன் அதை எடுத்துக் கொள்ளக்கூடாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்களிடம் மெட்டீரியல்ஸ் இருக்கிறது என்று எப்படி உங்களுக்குத் தெரியும்?

திரு. துரை முருகன் : மேலவையில் சொல்லியிருக்கிறாரே. அங்கே சொன்னவற்றை எங்களுக்குச் சொல்லியிருக்க வேண்டாமா?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினை பற்றி என்னிடம் மெட்டீரியல்ஸ் கொடுத்து பதில் வந்து நான் இந்த அவையில் வைக்கவில்லை என்ற நிலை இல்லை. இந்தப் பிரச்சினையில் நீங்கள் கொடுத்த தீர்மானத்தின் மீது அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்திருந்தால் இந்த அவையில் வைக்க வேண்டுமென்பதை முதல் கடமையாக ஏற்றுக் கொள்கிறேன். அங்கே கேள்விக்குப் பதில் சொன்னதைப் பெரிதாகச் சொன்னால் நான் அமைச்சரை அது பற்றிக் கேட்க இயலாது. எனக்குத் தகவல் அமைச்சரிடமிருந்து வரவில்லை.

திரு. க. சுப்பு: ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சரிடமிருந்து பேரவைத் தலைவருக்குத் தகவல் வராது. 41-வது விதியின் கீழ் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்குத்தான் தகவல் வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் பதில் சொல்வதாக இருந்தாலும் அதைத் தள்ளிவிடுகிற உரிமை, அதிகாரம் எனக்கு இருக்கிறது என்பதைத் தயவு செய்து ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். அமைச்சர் தயாராக இருந்தாலும் கூட தேவையில்லை என்று தள்ளிவிடுகிற உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே பிரச்சினைக்கே இடமில்லை.

(5) கவன ஈர்ப்பு.

(அ) வடாற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் சில கிராமங்களில் வோல்டேஜ் குறைப்பால் பம்ப்செட் மோட்டார் காயில் தீய்ந்து போவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த பெரிய கிளாம்பாடி, சிறுகிளாம்பாடி, ஊதிரம்பூண்டி, தேவனும்பட்டு, முத்திரசம்பூண்டி, மேப்பத்துறை, தென்னகரம், கீழ்ப்பத்துறை, தென் மகாதேவமங்கலம் ஆகிய கிராமங்களுக்குக் காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து அளிக்கப்படும் மின் சக்தியில் 28— 2— 1978 முதல் தினசரி திடீரென்று வோல்டேஜ் குறைவதால் பம்ப் செட்டுகளின் மோட்டார் காயில் தீய்ந்துபோவதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நடவடிக்கைக் குறிப்புகளை நான் படித்தேன். ஏற்கனவே நீக்கிவிட உத்தரவிட்டதை மறுபடியும் படித்ததைக் கொண்டு அவற்றை ஏற்றுக் கொண்டதாகக் கருதக்